செ.வெ.எண். 96 நாள் 29.01.10

## செய்தி வெளியீடு – 29.1.2010

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு கலைஞர் கவிதை! இசைப் புயல் ஏ.ஆ ர்.இரகுமான் இசையமைக்கிறார்!

கோவை மாநகரில் வரும் ஜுன் திங்களில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாட்டினையொட்டி, மாநாட்டின் மைய நோக்கத்தினைப் பறைசாற்றும்வகையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறப்பான கவிதை ஒன்றை எழுதியுள்ளார்கள். ஆஸ்கார் விருது மூலம் உலக புகழ் பெற்றதுடன், மத்திய அரசின் உயரிய "பத்மபூஷன்" விருதையும் பெற்றுள்ள இசைப் புயல் திரு. ஏ.ஆர். இரகுமான் அவர்கள் அக்கவிதைக்கு இசையமைக்கிறார்கள். இது குறித்து, முதலமைச்சர் கலைஞர் அவர்களை 28.1.2010 அன்று, அவரது இல்லத்தில் திரு. ஏ.ஆர். இரகுமான் சந்தித்து ஆலோசனைகளைக் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சன் குழுமத்தின் தலைவர் திரு. கலாநிதிமாறன், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, மும்பையைச் சேர்ந்த கவிஞரும், கதாசிரியருமாகிய திரு. ஜாவெட் அக்தர், பாடகர் பாம்பே ஜெயஸ்ரீ ஆகியோரும் பங்குபெற்றனர்.

****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9